ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2392/39 – 2024 ජූලි මස 10 වැනි බදාදා – 2024.07.10
2392/39 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

இரத்துச் செய்தல்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் கீழ், தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பான ஆகக் குறைந்த நாளாந்தக் கொடுப்பனவு அளவானது தொழில் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, 2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதிய 2385/14 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான அறிவித்தலினை, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர். பி. ஏ. விமலவீர ஆகிய நான், இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

**ஆர். பி. ஏ. விமலவீர,**
செயலாளர்
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

" மெஹெவர பியெச"
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு,
கொழும்பு 05,
2024, யூலை 10.

EOG 07-0107/1

இரத்துச் செய்தல்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச்சபை**

*சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் கீழ், இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பான ஆகக் குறைந்த நாளாந்த கொடுப்பனவு அளவானது தொழில் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, 2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதிய 2385/14 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான அறிவித்தலினை, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர். பி. ஏ. விமலவீர ஆகிய நான், இத்தால் இரத்துச் செய்கின்றேன்.*

**ஆர். பி. ஏ. விமலவீர,**
செயலாளர்,
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

*" மெஹெவர பியெச"*
*தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு,*
*கொழும்பு 05,*
*2024, யூலை 10.*

EOG 07-0107/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.